A

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2022

## எட்டாம் வகுப்பு

நேரம் : 2.30 மணி | தமிழ் | மதிப்பெண்கள் : 100

பகுதி - 1

I. அ) சரியான விடையைத் தேர்வு செய்க:- 10×1=10

1) மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ________
அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி

2) இயற்கையைப் போற்றுதல் தமிழர் ________
அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு

3) வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து ______ என அழைக்கப்படுகிறது.
அ) கோட்டெழுத்து ஆ) வட்டெழுத்து இ) சித்திர எழுத்து ஈ) ஓவிய எழுத்து

4) பின்வருவனவற்றுள் இறந்த கால வினைமுற்று ________
அ) படித்தான் ஆ) நடக்கிறான் இ) உண்பான் ஈ) ஓடாது

5) 'இவையுண்டார்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________
அ) இ+யுண்டார் ஆ) இவ்+உண்டார்
இ) இவை+உண்டார் ஈ) இவை+யுண்டார்

6) காட்டிலிருந்து வந்த ______ கரும்பைத் தின்றன.
அ) முகில்கள் ஆ) முழவுகள் இ) வேழங்கள் ஈ) வேய்கள்

7) பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை ______
அ) கல்வெட்டுகள் ஆ) செப்பேடுகள் இ) பனையோலைகள் ஈ) மண்பாண்டங்கள்

8) பழங்காலத்தில் விலையைக் கணக்கிட அடிப்படையாக அமைந்தது ______
அ) புல் ஆ) நெல் இ) உப்பு ஈ) மிளகு

9) கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு ______
அ) வீரம் ஆ) அச்சம் இ) நாணம் ஈ) மகிழ்ச்சி

10) அறநெறியில் வாழ்பவர்கள் உயிரைக் கவர வரும் ______ க் கண்டு அஞ்சமாட்டார்கள்.
அ) புலனை ஆ) அறனை இ) நமனை ஈ) பலனை

ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக. 5×1=5

1) கலப்பில் ______ உண்டென்பது இயற்கை நுட்பம்
2) சங்குடிச் சேலைகளுக்குப் புகழ்பெற்ற ஊர் ______
3) சொல்லும் பொருளும்: அ) மறவி ஆ) வாரி
4) கலைச்சொல் அறிவோம்: அ) Victory ஆ) Flute
5) வினைமரபுச் சொல்லை எழுது:- அ) பூ ஆ) கோழி

பகுதி -2

II. எவையேனும் ஒன்பது வினாக்களுக்கு விடையளி:- 9×2=18

1) செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?
2) ஓவிய எழுத்து என்றால் என்ன?
3) வினைமுற்று என்றால் என்ன?
4) நோயின் மூன்று வகைகள் யாவை?
5) நல்வாழ்விற்கு நாம் நாள்தோறும் செய்ய வேண்டியவை யாவை?
6) பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?
7) பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?
8) உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?
9) மக்கள் ஊரைவிட்டு வெளியேறக் காரணம் என்ன?

A

(2)

VIII தமிழ்

10) கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?
11) எம்.ஜி.ஆர் -யின் சமூக நலத்திட்டங்களின் நான்கனை எழுதுக.
12) சந்திப்பிழை என்றால் என்ன?

பகுதி - 3

III. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி:- 6×3=18

1) எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.
2) ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?
3) சான்றோர்க்கு அழகாவது எது?
4) எழுவாய் வேற்றுமையை விளக்குக.
5) திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு வருணனை செய்கிறார்?
6) கரூர் மாவட்டம் பற்றிய செய்திகளைச் சுருக்கி எழுதுக.
7) இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
8) இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?
9) தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக எம்.ஜி.ஆர். ஆற்றிய பணிகள் யாவை?

பகுதி - 4

IV. 1. அடிபிறழாமல் எழுதுக:- 3+2=5

அ) வழிவர் சிலர்கடல் ....... போகல் இன்றியே என முடியும் படைவேழம் பாடலை எழுதுக.

ஆ) விடல் என முடியும் குறளையும் எழுதுக.

பகுதி - 5

V. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி:- 4×5=20

1) தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறும் கருத்தினை இரண்டு மட்டும் எழுதுக.
2) உடல்நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக?
3) தொகை நிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
4) உழவுத்தொழில் பற்றித் தகூர் யாத்திரை கூறுவன யாவை?
5) மழையின்மையால் செடிகள் வாடிய நிலையை விளக்குக.
6) பிரம்பினால் பொருள்கள் செய்யும் முறையைக் கூறுக.

பகுதி - 6

VI எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி:- 3×8=24

1) அ) காப்பியக் கல்வி குறித்துத் திரு.வி.க. கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக. (அல்லது)

ஆ) சோழ வீரர்களைக் கண்ட கலிங்கப்படை வீரர்களின் செயல்களாகக் கலிங்கத்துப்பரணி கூறுவன யாவை?

2) அ) 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' கதையைச் சுருக்கி எழுதுக. (அல்லது)

ஆ) 'காலம் உடன் வரும்' - கதையைச் சுருக்கி எழுதுக.

3) கீழ்கண்ட தலைப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

முன்னுரை - நூலகத்தின் தேவை - வகைகள் - நூலகத்திலுள்ளவை - படிக்கும் முறை - முடிவுரை (அல்லது)

நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு பற்றி எழுதுக.

4) அ) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக. (அல்லது)

ஆ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

*********